# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 102/ந/2025 நாள். 13 .11.2025

S. அன்பழகன்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 11.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.03.2025 அன்று பெறப்பட்டு, 102/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

1) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 11.03.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“நான் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது பல்வேறு சமுதாய நலன் சார்ந்த பணிகளை செய்து வருகின்றேன். தற்போது கூட மாண்புமிகு தங்கள் ஆணை எண்.24/ந/2024 நாள் 20.09.2024 இல் பிறப்பித்த உத்தரவை செயல்படுத்தாத காரணத்தால் மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு W.P.(MD) No.30823/2024 நாள் 06.01.2025ந் தேதிய உத்தரவு மூலம் மாண்புமிகு தங்களது உத்தரவை நிறைவேற்ற உத்தரவு பெற்றுள்ளேன்.

இத்தகைய சூழ்நிலையில் துறையூர் திருச்சி சாலையில் இயங்கி வரும் ராஜா சில்க்ஸ் கட்டிடம் சுமார் 15000 சதுரஅடி பரப்பளவில் 15 மீட்டர் உயரத்திற்கு மேல், அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து, வாகனம் நிறுத்துவதற்கென்று 1 அங்குலம் கூட ஏதும் இடம் விடாமல், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் 1 அங்குலம் கூட இடம் விடாமல், ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் தடுக்க முடியாத இக்கட்டான சூழ்நிலையில் இயங்கி வருவது எனக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. ஏனென்றால் ராஜா சில்க்ஸ் போன்ற பிரமாண்டமான பெரிய ஜவுளி கடைக்கு தினமும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்வதோடு, பண்டிகை போன்ற முக்கிய தினங்களில் மிக அதிக அளவில் பொது மக்கள் வாகனத்தில் வந்து போகும் போது வாகனம் நிறுத்துவதற்குகென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து செயல்படுவதை சுமார் 10 வருடங்களுக்கு மேலாக இயங்குவதை சுட்டி காட்டி விதிமீறி செயல்படும் ராஜா சில்க்ஸ் கட்டிடத்தை பூட்டி சீல் வைக்குமாறு நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 06.01.2025 இல் புகார் அனுப்பி அதனை அவர் 07.01.2025 இல் பெற்று ஒப்புகை சான்று

வந்துள்ளது. நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குனர், மண்டல இயக்குனர் என அனைவருக்கும் அனுப்பி, என் புகாரை அனைவரும் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது.

நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 06.01.2025 இல் அனுப்பிய புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் நகராட்சி பகுதிகளில் உள்ள கட்டிடங்களை எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்று அனுப்பிய சுற்றறிக்கையை நகரமைப்பு ஆய்வாளர்களும், ஆணையர்களும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பின்பற்றாமல் இருந்தது (ராஜா சில்க்ஸ்) கட்டிடம் விதிமீறி செயல்படுவதில் இருந்து தெரிய வருகிறது என்று குறிப்பிட்டிருந்தேன். மேலும் 10 வருடங்களுக்கு மேலாக விதிமீறி செயல்படும் கட்டிடத்தை (ராஜா சில்க்ஸ்) நகராட்சி எவ்வித கண்காணிப்பு, ஆய்வு செய்யாமல் இருந்தது தெரிய வருகிறது என்று குறிப்பிட்டிருந்தேன். மேலும் உரிய நேரத்தில் விதிமீறி செயல்படும் ராஜா சில்க்ஸ் கட்டிடத்தை சோதனை செய்திருந்தால் விதிமீறல்களை தடுத்திருக்கலாம் என்று கூறியதோடு, கடந்த 10 வருடங்களுக்கு மேல் துறையூர் நகராட்சி ஆணையர் பதவியில் இருந்த அனைவருமே விதிமீறிய ராஜா சில்க்ஸ் கட்டிட உரிமையாளரிடம் லஞ்சம் பெற்றுள்ளார்களோ என்ற எனது சந்தேகத்தையும் தெரிவித்திருந்தேன்.

மேலும், நான் 06.01.2025இல் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே ராஜா சில்க்ஸ் கட்டிடம் 4 பக்கமும் சிறிதும் இடம் விடாமல் கட்டி உள்ளதால் எதிர்பாராமல் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் ஏராளமான பொதுமக்கள் உயிர் போகும் அபாயம் ஏற்படும் என்பதை சுட்டி காட்டியதோடு, ராஜா சில்க்ஸ்க்கு தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வாகனத்தில் வருவதால் பார்க்கிங் கென்று 1 அங்குலம் கூட இடம் வசதி செய்யாத காரணத்தால் கடைக்கு வரும் பொதுமக்கள் சாலையில் இரண்டு புறமும் வாகனத்தை நிறுத்துவதால் பொதுமக்கள் தார் சாலையில் நடந்து சென்று விபத்து ஏற்படுவதை சுட்டிகாட்டியதோடு துறையூரில் உள்ள மகாலட்சுமி ஜவுளி கடை பார்க்கிங் வசதி செய்து செயல்படும்போது ராஜா சில்க்ஸ்க்கு மட்டும் தனிசட்டமா என்பதையும் தெரிவித்திருந்தேன்.

மேலும் நான் 06.01.2025இல் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உயர்நீதிமன்றம் அரசு அதிகாரிகளின் செயல்பாட்டை மிக உன்னிப்பாக கண்காணித்து வருவதை கவனத்தில் கொண்டு அவரின் உயர் அதிகாரிகளின் உத்தரவை மதிக்காவிட்டாலும் பரவாயில்லை என்றும் கூறியதோடு மாண்புமிகு உயர்நீதி மன்றத்திடம் மரியாதையும், பயமும் கொண்டு விதிமுறைகளை மீறி செயல்படும் ராஜா சில்க்ஸ் கட்டிடத்தை பூட்டி சீல் வைக்குமாறு பொதுநலன் கருதி கேட்டிருந்தேன்.

மேலும் பொது மக்களிடம் இருந்து பெறப்படும் புகார் மனு தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை தலைமை செயலாளர் கூறி உள்ளபடி கடைபிடிக்குமாறு கூறியதோடு இது சம்மந்தமாக தலைமை செயலாளர் நாளிதழில் வெளியிட்ட அறிக்கையின் நகலையும் இணைத்து நடவடிக்கை எடுக்குமாறு ஆணையருக்கு அளித்த புகாரிலேயே குறிப்பிட்டதோடு ஒருவேளை தலைமை செயலாளர் கூறி உள்ள அறிவுறுத்தலை பின்பற்றவில்லை என்றால், மாண்புமிகு உள்ளாட்சி முறைமன்ற நடுவரிடமும், மாண்புமிகு உயர்நீதி மன்றத்திடமும் வழக்கு தாக்கல் செய்வேன் என்று ஆணையருக்கு சுட்டி காட்டி இருந்தேன்.

இதிலிருந்தே துறையூர் நகராட்சி ஆணையர் மாண்புமிகு உயர்நீதிமன்றம் உட்பட அனைத்து அதிகாரிகளின் உத்தரவை மீறுவதை வழக்கமாகவும், வாடிக்கையாகவும் கொண்டு செயல்படுகின்றாரோ என்கிற சந்தேகம் ஏற்படுகிறது.

எனவே மாண்புமிகு தாங்கள் பணியில் அறவழியில் நேர்மையாக பணிபுரிந்த காரணத்தால் தான் ஆண்டவன் தங்களுக்கு பணி ஓய்விற்கு பின்பும் இந்த பணியை வழங்கினான் என்று சொன்னால் அது மிகையல்ல என்று கருதுகின்றேன். எனவே நீதிபதி அந்தஸ்தில் உயர்ந்த பதவியில் உள்ள தாங்கள் தவறு செய்த துறையூர் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து, விதி மீறி செயல்படும் ராஜா சில்க்ஸ் கட்டிடத்தை பூட்டி சீல்வைக்குமாறு பொது நலன் சார்ந்து பணிவோடு, தாழ்மையுடன் கீழ்படிந்து கேட்டுக் கொள்கிறேன்."

2. மனுதாரரது புகார் குறித்து துறையூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.119/2025/எப்1, நாள் 20.05.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"நகரமைப்பு ஆய்வாளரின் அறிக்கையின்படி மேற்படி துறையூர் நகராட்சி திருச்சி சாலையில் இயங்கிவரும் ராஜா சில்க்ஸ் கட்டிடம் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ளதாகவும் 15 ஆண்டுகளாக ராஜா சில்க்ஸ் என்ற பெயரில் ஜவுளிக்கடை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ள ஆவணங்களை தேடித்தருவதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். அனுமதி வழங்கியதற்கான ஆவணம் எதுவும் நகராட்சியில் இல்லை கடந்த 15 ஆண்டுகளாக கட்டிடத்தில் எவ்வித புதிய கட்டுமானப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

திருச்சி ரோட்டில் சர்வே எண்கள்.376/170, 171 (வார்டு – A, பிளாக் – 7, T.S.No.42) கதவு எண்.27–ல் 2008–ம் ஆண்டில் தரைத்தளம், முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்தில் 93' 6" x 28' 6" அளவில் கட்டிடம் கட்டப்பட்டு ஜவுளிக்கடையாக பயன்பாட்டில் இருந்து வருகிறது.

கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், ஆவணங்களை தேடித்தருவதாகவும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை. எனவே, மேற்படி, கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் ராஜா சில்க்ஸ் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டிடத்தின் முன்புறத்தில் திருச்சி சாலையில் உள்ள கழிவுநீர் கால்வாயில் நிரந்தர கட்டுமானம் ஏதுமில்லை. சிலாப்கள் போடப்பட்டுள்ளது. கட்டிடத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் உள்ளதா என வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது. கட்டிடத்தில் முன்பக்க திறவிடமாக வடபுறத்தில் 11' 6" –ம் தென்புறத்தில் 4' 6" –ம் விடப்பட்டுள்ளது. பின்பக்க திறவிடம் 2' விடப்பட்டுள்ளது. பக்க திறவிடம் வடபுறத்தில் 1'–ம் தென்புறத்தில் 1' 6"–ம் விடப்பட்டுள்ளது.

உபயோகத்தில் உள்ள கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 10659 சதுரடிக்கு 2665.0 சதுரடி இடம் வாகனம் நிறுத்துமிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். வாகனம் நிறுத்துமிடத்திற்கென ராஜா சில்க்ஸ் கடையிலிருந்து 300 அடி தூரத்திற்குள் 3000 சதுரடி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வாகனம் நிறுத்துமிடமாக பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு எண்கள்.087/014/900550, 087/014/900551, 087/014/900552 மற்றும் 087/014/900553 ஆகியவற்றில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு இல்லை.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் மேற்படி கட்டுமானத்தின் மேல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது."

4) மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர் ஆகியோரை 10.06.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 04.06.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. S.அன்பழகன், என்பவர் 10.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார் : -

"துறையூர் திருச்சி சாலையில் இயங்கி வரும் ராஜா சில்க்ஸ் கட்டிடம் சுமார் 15000 சதுர அடி பரப்பளவில் 15 மீட்டர் உயரத்திற்கு மேல், அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து, வாகனம் நிறுத்துவதற்கென்று 1 அங்குலம் கூட இடம் ஏதும் விடாமல் கட்டிடத்தின் நான்கு புறமும் போதிய இடைவெளி விடாமலும், வாகனம் நிறுத்துவதற்கென இடவசதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து நகராட்சிக்கும், அரசுக்கும் விதிமீறி கட்டப்பட்டுள்ள ராஜா சில்க்ஸ் கட்டடத்தை இடித்து அகற்றிட மனு செய்திருந்தேன். கடந்த 10 வருடங்களாக நகராட்சி ஆணையர்களாக இருந்தவர்கள் லஞ்சம் பெற்றுக்கொண்டு என் மனு மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்து விட்டார்களோ என எண்ணத்தோன்றுகிறது.

அரசுக்கும், மாண்புமிகு முறைமன்ற நடுவத்திற்கும் அளித்த புகார்மீது நகராட்சி ஆணையர் அளித்திருக்கும் அறிக்கையில் உண்மை இருக்காது என நான் கருதுவதால், மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் நேரடியாக கட்டடத்தை ஆய்வு செய்து மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி விதிமுறைகளை முற்றிலும் மீறி தினமும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்வதோடு, பண்டிகைக் காலங்களில் மிக அதிக அளவில் பொதுமக்கள் வாகனத்தில் வந்து போகும் நிலையில், பார்க்கிங் வசதி இல்லாமல் செயல்படும் ராஜா சில்க்ஸ் கடை உள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற உத்தரவிடுமாறு பொது மக்கள் நலன் கருதி கேட்டு கொள்கிறேன். மேலும், நடவடிக்கை எடுக்காத நகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், விதி மீறி செயல்படும் ராஜா சில்க்ஸ் கடையை இடித்து அகற்றுமாறும் பொதுநலன் கருதி பணிவோடு, தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது புகார் உண்மை என்றால் உரிய நடவடிக்கை எடுக்கவும், எனது புகார் பொய் என கண்டறியப்பட்டால் அதன் மீது பிறப்பிக்கும் உத்தரவினை நான் ஏற்றுக்கொள்ளவும் தயாராக உள்ளேன் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்".

6) எதிர் மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர் திருமதி.அம்பிகா மற்றும் நகரமைப்பு ஆய்வாளராக பணியாற்றும் திருமதி. கே.சந்திரா ஆகியோர் 10.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்பித்துள்ளனர்.

மனுதாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள துறையூர் நகராட்சி திருச்சி சாலையில் ராஜா சில்க்ஸ் கட்டிடம் திருச்சி ரோட்டில் சர்வே எண்கள்.376/170, 171 (வார்டு –A, பிளாக் – 7, T.S.No.42) கதவு எண்.27–ல் 2008–ம் ஆண்டில் தரைத்தளம், முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கொண்ட கட்டடம் 93' 6'' x 28' 6" என்ற அளவில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு ஜவுளிக்கடையாக ராஜா சில்க்ஸ் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

மேற்படி கட்டடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லாததால், மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் ராஜா சில்க்ஸ் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

கட்டிடத்தின் முன்புறத்தில் கழிவுநீர் கால்வாய் உள்ளது. இக்கால்வாயின் மேலே கட்டிடத்தின் கட்டுமானம் இல்லை. சிலாப்கள் போடப்பட்டுள்ளது. கட்டிடத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் உள்ளதா என வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது. கட்டிடத்தின் முன்பக்க திறவிடமாக வடபுறத்தில் 11' 6" –ம் தென்புறத்தில் 4' 6" –ம் விடப்பட்டுள்ளது. பின்பக்க திறவிடம் 2' விடப்பட்டுள்ளது. பக்க திறவிடம் முறையே 1' மற்றும் 1' 6'' என இரண்டு பக்கமும் விடப்பட்டுள்ளது.

அண்மையில் வாகனம் நிறுத்துமிடத்திற்கென ராஜா சில்க்ஸ் கடையிலிருந்து 300 அடி தூரத்தில் 3000 சதுரடி இடம் ஒதுக்கப்பட்டு, தற்போது அவ்விடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. வரிவிதிப்பு எண்கள்.087/014/900550, 087/014/900551, 087/014/900552 மற்றும் 087/014/900553, ஆகியவற்றில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு இல்லை.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் மேற்படி கட்டுமானத்தின் மேல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரம் முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்". என தெரிவித்துள்ளனர்.

7) இரண்டாவது எதிர்மனுதாரரான ராஜா சில்க்ஸ் உரிமையாளர் திரு. சி.சிவகுமார் என்பவர் 10.06.2025 விசாரணையில் நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்றத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் தவறான தகவல்களை அளித்துள்ளார். துறையூர், திருச்சி சாலையில் இயங்கி வரும் ராஜா சில்க்ஸ் கட்டிடத்தின் உயரம் 42 அடி, கட்டிடத்தின் முன்புறத்தில் கழிவுநீர் கால்வாயில் நிரந்தர கட்டுமானம் ஏதுமில்லை. பொதுமக்கள் கால்வாயில் விழுந்துவிடாமல் இருக்க சிலாப்கள் தற்காலிகமாக போடப்பட்டுள்ளது. கட்டிடத்தின் முன்பக்கம் திறவிடமாக வடபுறம் 11 1/2 அடியும், தென்புறம் 5 அடியும் விடப்பட்டுள்ளது. கட்டிடத்தின் பின்புறம் 3 1/2 அடி திறவிடமாக விடப்பட்டுள்ளது.

வாகனம் நிறுத்துமிடத்திற்கென ராஜா சில்க்ஸ் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் வாகனம் நிறுத்துவதற்கென்று கடையிலிருந்து 300 அடி தூரத்தில் 3000 சதுரடி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எங்கள் கட்டடம் 15 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டுள்ளது. கட்டட அனுமதி என்னுடைய மாமா (மற்றொரு பங்குதாரர்) அவர்களிடம் உள்ளதால், அதனை பெற்று நகராட்சியிடம் அளிக்க அவகாசம் தேவைப்படுகிறது என்பதை முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

8) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரர் வாக்குமூலம், துறையூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள், துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

திருச்சி மாவட்டம், துறையூர்–திருச்சி ரோடு, எண்.27ல் இயங்கி வரும் ராஜா சில்க்ஸ் கட்டிடம் அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் சுமார் 15000 சதுர அடியில் விதிமுறைகளை மீறி செயல்படுவதால், பொதுநலன் கருதி அந்த கட்டிடத்தை தடைசெய்யக்கோரி மனுதாரர் துறையூர் நகராட்சி ஆணையருக்கு புகார் செய்தும் நடவடிக்கை எடுக்காமல் விதிமீறிய கட்டிடத்திற்கு உடந்தையாக செயல்படுவதால் நகராட்சி ஆணையர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், விதி மீறிய கட்டிடத்தை சீல்வைக்கவும், மனுதாரர் தனது புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில் இம்முறைமன்ற நடுவத்தை கோரியிருப்பது அறிய முடிகிறது.

துறையூர் நகராட்சி திருச்சி சாலையில் இயங்கி வரும் ராஜா சில்க்ஸ் கட்டிடம் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது என்பதும், 15 ஆண்டுகளாக ராஜா சில்க்ஸ் என்ற பெயரில் ஜவுளிக்கடை நடத்தப்பட்டு வருவதும், கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தேடித்தருவதாக தெரிவித்துள்ளார் என்பதும், அனுமதி வழங்கியதற்கான ஆவணம் எதுவும் நகராட்சியில் இல்லை என்பதும், கடந்த 15 ஆண்டுகளாக கட்டிடத்தில் எவ்வித புதிய கட்டுமானப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மேலும் துறையூர்–திருச்சி ரோட்டில் சர்வே எண்கள்.376/170 (வார்டு A, பிளாக் 7, T.S. No.42) கதவு எண் 27ல் 2008ம் ஆண்டில் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்தில் 93' 6"x 28' 6" அளவில் கட்டிடம் கட்டப்பட்டு ஜவுளிக்கடையாக பயன்பாட்டில் இருந்தும், அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை என்பதால் கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் ராஜா சில்க்ஸ் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

துறையூர்–திருச்சி சாலையில் இயங்கி வரும் ராஜா சில்க்ஸ் கட்டிடத்தின் உயரம் 42 அடி மற்றும் கட்டிடத்தின் முன்புறத்தில் கழிவுநீர் கால்வாயில் நிரந்தர கட்டுமானம் ஏதுமில்லை என்பதும், பொதுமக்கள் கால்வாயில் விழுந்துவிடாமல் இருக்க சிலாப்கள் தற்காலிகமாக போடப்பட்டுள்ளது என்பதும், கட்டிடத்தின் முன்பக்கம் திறவிடமாக வடபுறம் 11 1/2 அடியும், தென்புறம் 5 அடியும் விடப்பட்டுள்ளது என்பதும், கட்டிடத்தின் பின்புறம் 3 1/2 அடி திறவிடமாக விடப்பட்டு, ராஜா சில்க்ஸ் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் வாகனம் நிறுத்துவதற்கென கடையிலிருந்து 300 அடி தூரத்தில் 3000 சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் ராஜா சில்க்ஸ் உரிமையாளரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

மேலும் மேற்படி கட்டிடம் 15 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டுள்ளதால், கட்டட அனுமதி தன்னுடைய மற்றொரு பங்குதாரரிடம் உள்ளதால், அதனை பெற்று நகராட்சியிடம் அளிக்க அவகாசம் கோரியுள்ளதையும் அறிய முடிகிறது.

எனவே இந்நிலையில் மேற்கண்ட ராஜா சில்க்ஸ் கட்டிடத்தினை நேரடியாக கள ஆய்வு செய்து தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019 குறிப்பாக பிரிவு 28, 35(4) மற்றும் இணைப்பு IV, XXIII–ன்படி மேற்கண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, துறையூர்

நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு துறையூர்–திருச்சி சாலையில் இயங்கி வரும் ராஜா சில்க்ஸ் கட்டிடம் தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022)–ன்படி உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள துறையூர் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். இது சம்மந்தமான அறிக்கையினை இரண்டு மாதத்திற்குள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்ப நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

மேலும் கட்டிடத்தின் முன்புறத்தில் கழிவுநீர் கால்வாய் தொடர்பாக கட்டிடத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் உள்ளதா என வட்டாட்சியரிடம் அறிக்கை பெற்று, ஆக்கிரமிப்பு கண்டறியும்பட்சத்தில் உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு வழிகாட்டுதல்கள் மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற அறிவுரைகளின்படி மேற்கொள்ள துறையூர் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.அன்பழகன்,
155, அசோக் நகர், முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் வட்டம்), திருச்சிராபள்ளி மாவட்டம் – 621 010
2) நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர், திருச்சிராபள்ளி மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/11/25
செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032